செ.வெ.எண்:60 /ஜீன் / 2019

நாள்:17.06.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 867 ஏரி குளங்களில் படிந்துள்ள வண்டல் மண், சவுடு மண், களிமண், போன்ற சிறுவகை கனிமங்களை விவசாயிகள் தங்கள் வயல்களில் பயன்படுத்தவும், மண்பாண்ட தொழில் செய்வோர் பயன்படுத்தவும் அனுமதி பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

**வண்டல் மண், வண்டல் மண், சவுடு மண், களிமண், ஆகிய கனிமங்களை இலவசமாக எடுத்துக்கொள்வதற்கு அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் 21.06.2019 முதல் 23.06.2019 வரை சிறப்பு முகாம் நடைபெறவுள்ளது. விவசாயிகள் விண்ணப்பித்து பயன்பெறலாம்.**

---

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையினரின் கட்டுப்பாட்டில் உள்ள 867 ஏரி குளங்களில் படிந்துள்ள வண்டல் மண், சவுடு மண், களிமண், போன்ற சிறுவகை கனிமங்களை விவசாயிகள் தங்கள் வயல்களில் பயன்படுத்தவும், மண்பாண்ட தொழில் செய்வோர் பயன்படுத்தவும் அனுமதி பெறுவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையினரின் கட்டுப்பாட்டில் அமைந்துள்ள ஏரி மற்றும் குளங்களில் படிந்துள்ள வண்டல் மண் / சவுடுமண் /களிமண் ஆகிய கனிமங்களை விவசாயிகள் தங்கள் வயல்களில் பயன்படுத்தவும், பொதுமக்களின் சொந்தப் பயன்பாட்டிற்கும், மண்பாண்டத் தொழில் செய்வோர் பயன்பாட்டிற்கும் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் வட்டாட்சியரால் அனுமதி வழங்கப்படுகிறது. இதற்கான விண்ணப்பம் வட்டாட்சியர் அலுவலகங்களில் கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

விவசாயப் பயன்பாட்டிற்காக வண்டல் மண் எடுக்க விண்ணப்பிக்கும் விவசாயிகள் விண்ணப்பத்துடன் சிட்டா நகலை இணைத்து வட்டாட்சியர் அலுவலகத்தில் விண்ணப்பித்தால் உடன் உரிய ஆணை வழங்கப்படுகிறது. பொதுமக்கள் சொந்தப் பயன்பாட்டிற்கு சவுடுமண் இலவசமாக எடுக்க விரும்பினால், வட்டாட்சியர் அலுவலங்களில் விண்ணப்பித்து இதற்கான ஆணையைப் பெற்றுக்கொள்ளலாம். மண்பாண்டங்கள் செய்வதற்கான களிமண் எடுக்க விண்ணப்பம் செய்வோருக்கு இலவசமாக களிமண் எடுத்துக்கொள்ள அனுமதி வழங்கப்படும். இதற்கு சம்பந்தப்பட்ட தொழிலாளர் சங்கம் அல்லது கிராம நிர்வாக அலுவலரின் சான்றுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

விவசாயம், பொதுப்பயன்பாடு மற்றும் மண்பாண்டம் செய்யும் நோக்கத்தில் மண் எடுக்க வழங்கப்படும் அனுமதி இருபது நாட்கள் மட்டும் செல்லத்தக்கதாக இருக்கும். பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறையினரின் நிபந்தனைகளுக்குட்பட்டு பயனாளிகள் வண்டல் மண் /சவுடுமண் /களிமண் ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும்.

பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்பு கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 52 குளங்களுக்கும், பொதுப்பணித்துறை அரியாறு கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள 79 குளங்களுக்கும் மற்றும் ஊரக வளர்ச்சித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள 736 குளங்களுக்கும் ஆக கூடுதல் 867 ஏரி/குளங்களில் விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் மண்பாண்டம் செய்வோர் தங்கள் பயன்பாட்டிற்காக வண்டல் மண்/சவுடுமண் /களிமண் ஆகிய கனிமங்களை இலவசமாக எடுத்துக் கொள்வதற்கான **சிறப்பு முகாம் 21.06.2019 முதல் 23.06.2019 வரை திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்களிலும் நடைபெறும்.** விவசாயிகள், பொதுமக்கள் மற்றும் மண்பாண்டம் செய்வோர் இச்சிறப்பு முகாமினை பயன்படுத்திக் கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

17/6/2019

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி**